விடுநர்

டாக்டர் கே. கோபால், இஆப.,
பேரூராட்சிகளின் ஆணையர்,
குறளகம், சென்னை – 108.

பெறுநர்

பேரூராட்சிகள் உதவி இயக்குநர்,
அனைத்து மண்டலங்கள்

**ந.க.எண். 874/2008 அ3 நாள் 04.02.2008**

அய்யா,

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களின் மாறுதல் கோரும் கோரிக்கை குறித்து சில அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்தது.

பார்வை : அரசாணை எண். 205 ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.3.1989

பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில ஒரு மாவட்டத்திலுள்ள பேரூராட்சியிலிருந்து மற்றொரு மாவட்டத்திலுள்ள பேரூராட்சிக்கு மாறுதல் கோரும் நேரிடை விண்ணப்பங்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஆகியவை பல்வேறு வழிமுறைகள் வழியாக இவ்வியக்ககத்திற்கு வரப்பெறுகின்றன.

2. பார்வையில் காணும் அரசாணையில் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களை பொறுத்தவரை ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகாகும். நியமன அலுவலர் செயல் அலுவலர் ஆகும். அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் பேரூராட்சி பணியாளர்கள் ஆவர். ஒரு மாவட்டத்தை சார்ந்த பேரூராட்சியான தனி அலகிலிருந்து வேறொரு மாவட்டத்திலுள்ள தனி அலகான பேரூராட்சிக்கு அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் மாறுதல் கோருவது நிர்வாக இடர்பாடுகளை ஏற்படுத்தி பல நிர்வாக சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

3. எனவே, நிர்வாக நலனின் அடிப்படையில் இதைத் தவிர்க்க உரிய அறிவுரையினை செயல் அலுவலர் மூலமாக அனைத்து அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/– கே. கோபால்,**
ஆணையர்.